தமிழ் நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1973 டிசம்பர் 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினுக்கள்-விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினுக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 539, 540, 541, 542 ஆகிய எண்களுள்ள வினுக்கள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

இருப்புப் பாதைகளின் குறுக்கே மேம்பாலங்கள்

* 543 வினு—**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்-மதுரை நெடுஞ்சாலையில் ஐந்து இடங்களில் குறுக்கிடும் இருப்புப்பாதைமீது மேம்பாலங்கள் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) தேசீய நெடுஞ்சாலை 7-ல் திண்டுக்கல்–மதுரை பிரிவில் நான்கு இடங்களில் மாத்திரமே இருப்புப்பாதையைக் கடக்க வேண்டியுள்ளது. இரண்டு இடங்களில் மாற்றுச்சாலை அமைக்கவும் இரண்டு இடங்களில் மேம்பாலம் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. வேலை 1973-74-ல் துவக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வா.மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சாதகமான பதில் அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஐந்தாவதாக பரவை என்னும் இடத்திலும் ஒரு மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா ?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Level crossing at Mile 269/6 (in between Ambathurai and Kodaikanal Road Railway Stations).

Level crossings at Mile 276/2 and 278/5 (in between Kodaikanal Road, Pallipatti and Vadipatti Railway Stations).

Level crossing at M. 239/3 (in between Sholavandan and Samayanallur Railway Stations) '
நான் குறிப்பிட்ட இந்த நான்கு வேலைகள் எடுத்துக்கொள்ளப்படுவதாக இருக்கின்றன.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, நெடுஞ்சாலையைக் கடக்கிற மேம்பாலம் மண் பாலமாகக் கட்டப்படாமல் கான்க்ரிட் பாலமாகக் கட்டப்பட்டால், நடைமுறையில் செலவு குறைவாக இருக்கும் சிக்கனமாகவும் இருக்கும் என்று பொறியாளர்கள் கூறுகிறார்களே, அதை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இருப்புப் பாதையைக் கடக்கும் இடத்தில் கான்க்ரிட் போடுவார்கள். 'அப்ரோச் ரோடு' மண் சாலையாகத்தான் போடவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, நான்கு இடங்களில் எந்தெந்த இடங்களில் 'ஓவர்ப்ரிட்ஜ்' போடப்படுகிறது என்பதை அறியலாமா ?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Level crossing in between Ambathurai and Kodaikanal Road Railway Stations : The proposal for the construction of an overbridge is included in the Fourth Plan.

Level crossings in between Kodaikanal Road, Pallipatti and Vadipatti Railway Stations : The work of forming a diversion route avoiding the two level crossings has been sanctioned.

Level crossing in between Sholavandan and Samayanallur Railway Stations : The proposal for the construction of an overbridge is included in the Fourth Plan. The approximate cost of the work will be about Rs. 16.00 lakhs.
மாற்றுப் பாதைகள் இரண்டு இடங்களிலும், ஓவர் பிரிட்ஜ் இரண்டு இடங்களிலும் அமைக்கப்படுகின்றன.